மாலை முரசு
பக்கங்கள் 16 + 2
முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 27 ஞாயிற்றுக்கிழமை 13.10.2024 | அதிர்வு 73

## களுவாஞ்சிக்குடி விபத்தில் 16 சிறுவன் சிறுவன் மரணம்

(கனகராசா சரவணன்)

களுவாஞ்சிக்குடி - கல்முனை பிரதான வீதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில்

02▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்




# தமிழரசின் யாழ். மாவட்ட வேட்பாளர் அறிமுக விழா

## பெருமளவு ஆதரவாளர்கள் பங்கேற்பு

(எஸ்.நிதர்ஷன்)

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறி முக நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இன்று மாலை நடைபெற்றது.**

**தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தலைமையில் யாழ்ப்பாணத்திலுள்ள தந்தை செல்வா மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.**

இதன்போது யாழ். தேர்தல் மாவட்ட 9 வேட்பாளர்களும் அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் வேட்பாளர் அறிமுக நிகழ்வு ஆரம்பித்து வைக் கப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் வேட்பாளர் கள் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர் கள், ஆதரவாளர்கள் எனப் பெருமள விலா னோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# ஒற்றுமையை விரும்பும் தமிழரின் தெரிவு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியே!

## வன்னி மாவட்ட வேட்பாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

(கி.வசந்தன்)

"ஒற்றுமையை விரும்பும் தமிழ் மக்களின் தெரிவு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்ணியாகும். அதற்குப் பலமான ஆணையை வழங்க வேண்டும்." – என்று ஜனநாயகத் தமழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் சிவசக்தி ஆனந்தன் கோரியுள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"போரின் பின்னரான சூழலில் தமிழ் மக்கள் ஒற்றுமையை மையப்படுத்தியே தமது ஆணையை வழங்கி வந்துள்ளார்கள். அந்தவகையில் தொடர்ச்சியாக ஜனநாயத் தமிழ்த் தேசியக் கூட்டணியாக நாம் ஐந்து கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றோம்.



இந்தக் கூட்டணியில் குறைகள் நிறைகள் இருந்தாலும் கூட, தமிழ் மக்களின் விருப்புக்கு அமைவாகவும், அவர்களின் அபிலாஷைகளை அடைந்து கொள்வதற்காகவும் இணைந்து செயற்படும் முக்கியமானதொரு அரசியல் சக்தியாக இருக்கின்றமை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு விடயமாகும்.

எமது கூட்டைப் பலவீனப்படுத்துவதற்கு அண்மைய நாட்களில் எதிர்மறையான பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், தமிழ் மக்கள் யதார்த்தத்தை நன்கு அறிவார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

அந்தவகையில், நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானது. திருப்புமுனையை ஏற்படுத்துவதாகவே இருக்கப்போகின்றது.

ஆகவே, தமிழ் மக்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைப் பலப்படுத்துவதன் ஊடாகவே ஏகோபித்த நிலைப்பாட்டை வெளிப்படுத்த முடியும். அதற்காக வடக்கு, கிழக்கு பூராகவும் தமிழ் மக்கள் தங்கள் ஆணையை உயர்ந்த அளவில் வழங்க வேண்டியது தவிர்க்க முடியாதவொன்றாகின்றது." – என்றுள்ளது




# சீரற்ற காலநிலையால் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு

கொழும்பு, கம்பஹா உட்பட நாட்டில் 13 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் 30 ஆயிரத்து 17 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 210 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே பெருமளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விரு மாவட்டங்களில் மாத்திரம் ஒரு இலட்சத்து 9 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீரற்ற காலநிலையால் இருவர் உயிரிழந்துள்ளனர். இருவர் காயம் அடைந்துள்ளனர்.

235 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன. 6 ஆயிரத்து 852 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

## களுவாஞ்சிக்குடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த 16 வயதுடைய ரவீந்திரன் என்ற சிறுவனே சம்பவ இடத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கல்முனையில் இருந்து களுவாஞ்சிக்குடி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும், களுவாஞ்சிக்குடியில் இருந்து கல்முனை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்துக்கு அண்மித்த பகுதியில் நேருக்கு நேர் மோதியுள்ளன.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காகக் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த நபர் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் களுவாஞ்சிக்குடி போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மாம்பழம் சின்னத்தில் போட்டியிடுவோரை வாழ்த்திய தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீன முதல்வர்

(எஸ்.நிதர்ஷன்)

ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு காலத்தின் தேவை என வலியுறுத்திய தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீன முதல்வர் கலாநிதி வேலுப் பிள்ளை பத்மதயாளன், அந்தக் கட்ட மைப்பு தமிழ் அரசியல் வரலாற்றில் புதிய அத்தியாயத்தை படைக்க வேண் டும் எனவும் வாழ்த்தினார்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சையாகப் போட்டியிடும் ஜன நாயகத் தமிழரசுக் கூட்டமைப்பின் வேட் பாளர்கள் நேற்று மாலை தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீன முதல் வரைச் சந்தித்து ஆசி பெற்றனர்.



இதன்பின்னர் சந்திப்பு தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீன முதல்வர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய செயற்பாடுகள் பொருத்தமற்று காணப் படுவதாலும் போதிய வெளிப்படைத் தன்மை இல்லாத காரணத்தாலும் புதிய கட்டமைப்பு மக்களால் வரவேற்கப்படு கின்றது.

அதில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டத்தரணிகள் என சமுதாய விழிப்புணர்வை விரும்பும் தலைவர்கள் இருப்பதைப் பாராட்டு கின்றோம்.

பேராயராக ஒரு விடயத்தைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். தமிழ் மக் களின் வாழ்வியலுக்காக இதயசுத்தியு டன் பாடுபடும் எந்தத் தலைவனையும் நான் உண்மையிலேயே தலைவணங் குகிறேன். ஏனென்றால் அது காலத்தின் தேவை. எமது மக்களின் வாழ்வியலைப் பாதுகாக்க புதிய கட்டமைப்பு உண் மையிலேயே பாடுபடும் என எதிர்பார்க் கின்றேன்.

வாக்காளர்கள் யாரையும் எதிர்க்க வேண்டும் எனக் கூறவில்லை. மாற் றத்தை உணர்ந்து உண்மைகளை உணர்ந்து வாக்களிக்க வேண்டும். இது எமது தலையில் விழுந்துள்ள பாரிய பொறுப்பு.

இந்தக் கூட்டமைப்பு சிறந்து விளங்கி நாடாளுமன்றத்தில் ஜனநாயகத்துக்கும் உண்மைக்கும் நீதி நியாயத்தை வெளிப்படுத்தி தமிழ் மக்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து சகோதர சிங்கள, முஸ்லிம் இனங்களுடனும் இணைந்து பணி யாற்ற வேண்டும். இதற்காக அனைத்து மக்களும் பாடுபட்டு வாக்களிக்க வேண் டும் என மனதார வேண்டுகிறேன்." – என்றார்.

இந்தச் சந்திப்பில் ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர்களான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், வடக்கு மாகாண முன்னாள் விவசாயத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன், விம லேஸ்வரி, நாவலன், குணாளன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் அதிருப்தி அடைந்த குழுவினர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு என்ற பெயரில் சுயேச்சையாக மாம்பழம் சின்னத்தில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.





# யாழில் அங்கஜன் கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு

**(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)**

ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் (தபால் பெட்டிச் சின்னம்) வேட்பாளர் அறிமுக நிகழ்வும் ஆரம்பப் பரப்புரைக் கூட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இன்று காலை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளருமான அங்கஜன் இராமநாதனின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.














# கல்முனை பசுமை வீட்டுத்திட்ட சுற்றுச் சூழலை பாதுகாக்கும் பொருட்டு விசேட வேலைத்திட்டம்

(றியாஸ் ஆதம்)

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள பசுமை வீட்டுத் திட்ட சுற்றுச் சூழல் மற்றும் அதனை அண்டியுள்ள வாய்க்கால் என்பன சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டு வருகிறது.

இந்த வீட்டுத்திட்ட சுற்றுச் சூழலிலும் அங்குள்ள வாய்க்கால்களிலும் பொது மக்கள் குப்பைகளைக் கொட்டிவருகின்றனர். இந்த செயற்பாட்டைத் தடுக்கும் பொருட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறார்.

அந்தவகையில் பிராந்திய பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.எப்.இஸட்.சராப்தீன் நேற்று சனிக்கிழமை (12) மாபெரும் சிரமதான நிகழ்வொன்றை ஒழுங்கு செய்திருந்தார்.

கல்முனை மாநகர சபை, நீர்ப்பாசனத் திணைக்களம், கல்முனை பொலிஸார் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடன் குறித்த சிரமதானப் பணி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை இந்த வீட்டுத்திட்ட சுகாதார கழிவு முகாமைத்துவம் தொடர்பாக அங்குள்ளவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. அதனை முறையாக மேற்கொள்வதற்கு உரிய பைகள் வழங்கப்பட்டன.

இந்த சிரமதான நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷாத் உள்ளிட்டவர்களுடன் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் ஊழியர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள், நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்கள் உழியர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.








# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஒரே குட்டையில் ஊறியவை

ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம் படுகொலை, யாழ்ப்பாணத்தில் லலித், குகன் காணாமலாக்கப்பட்டமை உட்பட முக்கிய ஏழு சம்பவங்கள் குறித்து விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்த விசாரணைகளையும் தீவிரப்படுத்துமாறு பொது மக்கள்பாதுகாப்புஅமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பதில்பொலிஸ்மா அதிபருக்கு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த சம்பவங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினருடனும் உரிய பொலிஸாருடனும் இணைந்து செயற்படுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு பதில் பொலிஸ்மா அதிபரை கேட்டுக்கொண்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரபல வர்த்தகர் தினேஷ் ஸ்ஷாப்டரின் மரணம், வெலிகமவில் டபிள்யூ 15 ஹோட்டலிற்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப்பட்டமை குறித்தும் விசாரணைகளை துரிதப்படுத்துமாறுபொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இப்படி முன்னைய ஆட்சி காலங்களில் இடம்பெற்ற - சில தெரிவு செய்யப்பட்ட - குற்றச்சம்பவங்கள் குறித்து மாத்திரம் மீள விசாரணையைத் துரிதப்படுத்த புதிய அரசு உத்தரவிட்டிருப்பது அரசியல் ரீதியான அதன் நியாயமற்ற போக்கை அப்பட்டமாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

அரசியல் ரீதியாக தான் கருதும் அல்லது விரும்பும் சில வன்முறைச் சம்பவங்கள் குறித்து மாத்திரமே அநுர குமார திஸாநாயக்கவின் புதிய அரசு மீள்விசாரணைகளுக்கு உத்தரவிட்டிருக்கின்றது.

இந்தக் குற்றச்சம்பவங்களில் யாழ்ப்பாணத்தில் காணாமலாக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படும் முன்னிலை சோஸலிசக் கட்சியின் செயற்பாட்டாளர்களான லலித் குமார் வீரராஜு மற்றும் குகன் முருகானந்தம் ஆகியோர் விடயத்தில் இந்த அரசு முக்கியத்துவம் காட்டுவதில் அர்த்தம் உண்டு.

யுத்தம் முடிவடைந்த பின்னர் 2011 ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் திகதி இந்த இருவரும் காணாமல் போனார்கள். அந்தச் சமயத்தில் இவர்கள் இப்போதைய ஆட்சியாளர்களின் பங்காளர்களாக செயல்பட்டவர்கள்.

வடக்கில் வைத்து காணாமலாக்கப்பட்டவர்கள் என்று கருதப்படும் அந்த இருவர் விடயத்தை மாத்திரம் மீள விசாரிக்கப் புறப்பட்டால் அது வித்தியாசமான கருத்தியலைத் தரும் என்பதால் அதனை மூடி மறைப்பதற்காக ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் (தராக்கி) படுகொலை பற்றியும் மீள விசாரிப்பதான ஒரு படம் காட்டப்பட்டிருப்பதாகவே தோன்றுகிறது.

சிவராம் படுகொலை விவகாரம் தொடர்பில் ஏற்கனவே வெளிப்பூச்சுக்கு ஒரு வழக்கு விசாரணை நடத்தி நாடகமாடப்பட்டிருக்கின்றது என்பது பொதுவாக இவ்விடயங்களை அறிந்த தரப்புகளின் கருத்து. அதனால் அந்த விவகாரம் குறித்து மீள விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது சரியானது.

ஆயினும், புதிய அரசு இப்போது குறிப்பிட்டுள்ள குற்றச்சம்பவங்களை விட நீதி நிலைநாட்டப்பட வேண்டிய - விசேடமாக உயிர்ப்பலி கொள்ளப்பட்ட - பல படுகொலைக் குற்றச் சம்பவங்கள் வடக்கில் - குறிப்பாக தமிழர்கள் விடயத்தில் - இடம் பெற்றிருக்கின்றன.

அதுவும் ஊடகத் துறைக்கு எதிராக திட்டமிட்டு கொழும்பு பௌத்த - சிங்களப் பேரினவாத அரசுகளால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன என்பது சட்டத்தின் முன் நிரூபிக்கப்படாத - ஆனால் மக்கள் உணர்ந்த - உண்மை.

நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், செல்வராஜா ரஜீவர்மன், பரணிரூபசிங்கம் தேவகுமார் என்று இந்தப் பட்டியல் நீண்டது. முப்பதுக்கும் மேற்பட்ட தமிழ் ஊடகப் பணியாளர்கள் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் யாருடைய படுகொலைகள் தொடர்பாகவும் முன்னைய பௌத்த - சிங்களப் பேரினவாத அரசுகள் நீதி, நியாயமான, நம்பகத்தன்மையான விசாரணைகளையோ பொறுப்புக் கூறல் நடைமுறைகளையோ முன்னெடுக்கவில்லை.

அதிலிருந்து இந்த அரசும் மாறுபட்டதல்ல என்பதை இந்த அரசின் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு இப்போது பொலிஸாருக்கு விடுத்திருக்கும் உத்தரவு தெளிவாக வெளிப்படுத்தி நிற்கிறது.

அந்த வகையில் பார்த்தால் இதுவும் முன்னைய பேரினவாத அரசுகளின் குட்டையில் ஊறிய அதே மட்டைதான் என்பது தெளிவு.

# வெளிநாடுகளில் நிதி வைப்பிலிட்டுள்ள அரசியல்வாதிகள் தொடர்பில் ஆராய்வு!

வெளிநாடுகளில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் கோடிக் கணக்கான பணத்தை வைப்பிலிட்டுள்ள னர் என்று கூறப்படும் 13 அரசியல்வாதி கள் மற்றும் அரச அதிகாரிகள் குறித்து அரசின் புலனாய்வு அமைப்புகள் விசார ணையை தொடங்கியுள்ளன.

இந்த நிதி நிறுவனங்களிடம் இருந்து அது பற்றிய தகவல் அறிக்கைகளைப் பெறுவது முதல் நடவடிக்கை என்று அந்த அமைப்புக்கள் தெரிவித்துள் ளன.

வெளிநாடுகளில் பணத்தை வைப்பு செய்யும் முறைகள் குறித்து இந்த நாள்களில் சிறப்பு ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது என்று புலனாய்வு அமைப்பு கள் குறிப்பிடுகின்றன.

இந்த பணிகள் கடினமானதாக இருந்தாலும், அதற்காக உன்னிப்பாக செயற்பட்டு வருவதாகவும், இதுபற்றிய தகவல் யாருக்கேனும் தெரிந்தால் சமர்ப்பிக்கலாம் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது வெளிநாடுகளில் மறைத்து வைக்கப் பட்டுள்ள பணத்தை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு அரசியல்வாதிகள் உட்பட பல்வேறு நபர்கள் செயற்படுவதாக சில அரசியல் மேடைகளில் குறிப்பிடப் பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# கமலா ஹாரிஸ்க்கு ஆதரவாக ஏ.ஆர்.ரகுமான் இசை நிகழ்ச்சி

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கியுள்ள கமலா ஹாரிஸ் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டமைக்கு ஆதரவாக தென்னிந்திய திரைபட பாடகர் ஏ.ஆர்.ரகுமான் இசை நிகழ்ச்சி ஒன்றை நடத்தவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்த நாட்டின் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிடும் தற்போதைய துணை ஜனாதிபதியும், இந்திய வம்சாவளியை சேர்ந்தவருமான கமலா ஹாரிஸ் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டள்ளார்.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக கமலா ஹாரிஸ் தெரிவு செய்யப்பட்டதைக் கொண்டாடும் விழாவிலேயே இந்த இசைநிகழ்ச்சி இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில், அமெரிக்காவில் இயங்கும் ஆசிய, அமெரிக்க, பசிபிக் தீவுவாசிகளின் அமைப்பு கருத்து தெரிவிக்கையில்,

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக கமலா ஹாரிஸ் அறிவிக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க தருணத்தை ஏ.ஆர். ரகுமானுடன், உலகத் தரம் வாய்ந்த நேரடி இசை நிகழ்ச்சியுடன் இணைந்து கொண்டாட உள்ளோம்.

நிகழ்ச்சிக்கான திகதி குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என தெரிவித்துள்ளது.

இதற்கிடையே கமலா ஹாரிஸ்க்கு ஆதரவாக 30 நிமிட ஆதரவு காணொளி ஒன்னையும் ஏ.ஆர்.ரகுமான் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## 2024 பொதுத்தேர்தலில் 690 வேட்புமனுக்கள்

# 196 உறுப்பினர்கள் தெரிவுக்காக 8,388 வேட்பாளர்கள் போட்டி!

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் மொத்தமாக 8 ஆயிரத்து 388 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

பொதுத் தேர்தலுக்காக நாடளாவிய ரீதியில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களால் 764 வேட்பு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அவற்றில் 74 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. 690 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் உள்ள 225 ஆசனங்களுக்காக 196 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் மூலமும் 29 பேர் தேசிய பட்டியல் மூலமும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்த முறை பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவாக வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். 18 ஆசனங்களுக்காக 966 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

கம்பஹா மாவட்டத்தில் 19 ஆசனங்களுக்காக 902 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இந்த முறை பொதுத் தேர்தலில் அதிக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச் சைக் குழுக்களைக் கொண்ட திகாம டுல்ல தேர்தல் மாவட்டத்தில் 7 ஆச னங்களுக்கு 640 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

அதேபோன்று புத்தளம் மாவட்டத்தில் 08 உறுப்பினர்களுக்காக 429 வேட்பாளர்கள் 24 அரசியல் கட்சிகள் 15 சுயேட்சை குழுக்கள் ஊடாகவும் வன்னி மாவட்டத்தில் 06 உறுப்பினர்களுக்காக 423 வேட்பாளர்கள் 22 அரசியல் கட்சிகள் 25 சுயேட்சை குழுக்கள் ஊடாக போட்டியிடுகின்றனர்.

மொனராகலை மாவட்டத்தில் 6 ஆசனங்களுக்கு 135 பேரும், பொலன்னறுவை மாவட்டத்தில் 5 ஆசனங்களுக்கு 120 பேரும் போட்டியிடுகின்றனர்.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் மொனராகலை மற்றும் பொலன்னறுவை ஆகிய இரண்டு மாவட்டங்களிலேயே குறைந்தளவான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கண்டியில் உணவகத்தில் தங்கியிருந்த சீனப் பிரஜைகள் பொலிஸாரால் கைது!

கண்டியில் உணவகம் ஒன்றில் தங்கியிருந்த நூற்றுக்கும் அதிகமான சீனப் பிரஜைகள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரமிட் நிதி மோசடி செயற்பாட்டில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட மடிக் கணனிகள் மற்றும் கையடக்க தொலைபேசிகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைத்த ரகசியத் தகவலின் பேரில் இந்த சீனப் பிரஜைகளை சோதனையிட்ட போது, கண்டியில் தங்கியிருப்பதற்கான நியாயமான காரணம் எதனையும் அவர்கள் முன்வைக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

இதனையடுத்து பிரமிட் நிதி மோசடி செயற்பாட்டில் அவர்களுக்குத் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் சீனப் பிரஜைகள் நூறு பேரும் கைது செய்யப்பட்டு, கண்டி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## சர்வமத தலைவர்களின் ஆசியுடன்

# மன்னாரின் தேர்தல் பிரச்சாரத்தில் சட்டத்தரணி செல்வராஜ் டினேசன்!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

சர்வமத தலைவர்களின் ஆசியுடன் இலங்கை தமிழரசு கட்சி சார்பாக வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இளம் சட்டத்தரணியும் சமூக சேவையாளருமான செல்வராஜ் டினேசன் நேற்று சனிக்கிழமை(12) தனது தேர்தல் பரப்புரையை ஆரம்பித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் இளம் சட்டத்தரணியான செல்வரஜா டினேசன் இம்முறை இடம்பெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் இலங்கை தமிழரசு கட்சி சார்பாக வன்னி மாவட்டத்தில் மன்னாரில் இருந்து போட்டியிடுகின்றார்.

இம்முறை மாற்றம் ஒன்றையும், இளம் வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற பலரது கோரிக்கைகளுக்கு அமைவாகவும் சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

இந்த நிலையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை உள்ளடங்களாக சர்வமத தலைவர்களின் ஆசியுடன் தனது தேர்தல் பரப்புரையை ஆரம்பித்துள்ளார்.



இவருக்கு மன்னார் மாவட்டத்தில் இளைஞர் குழுக்கள் அமோக ஆதரவு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# அட்டாளைச்சேனை பொது நூலகத்தில் மாணவர்களுக்கான வாசிப்புப் பயிற்சி

**(எம். எப்.நவாஸ்)**

அட்டாளைச்சேன பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் மெல்லக் கற்கும் மாணவர்களின் நன்மை கருதி அட்டாளைச்சேனை பிரதேச சபையின் அனுசரணையுடன் அட்டாளைச்சேனை பொது நூலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய வாசிப்பு மாதத்தின் விசேட 3 மாத பயிற்சி நெறியானது நேற்று (12) அட்டாளைச்சேனை பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு பட்டய நூலகர் ஏ.சி. அன்வர் சதாத் தலைமையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் எல்.எம்.இர்பான் கலந்து கொண்டார்.

சனசமூக அபிவிருத்தி உத்தியோ கத்தர் என்.எம்.ஸாஹிர், பிரதேச சபை யின் நிதி உதவியாளர் குஸ்ரி, அதிபர்க ளான எம்.ஐ.ஐவ்பர், ஓ.எல்.எம். றிஸ்வான் மற்றும் நூலக ஊழியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பல ரும் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சி நெறிக்கு வளவாளர்க ளாக ஏ.சி.சிபானா, எச்.எப்.றுக்ஸானா ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# பாடசாலைக் குறைபாடுகளை நேரில் பார்த்தார் அரச அதிபர்



**(எம். எப். றிபாஸ்)**

அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாலமுனை அல் ஹிக்மா வித்தியாலயத்துக்கு அம்பாறை மாவட்ட அரச அதிபர் விஜயம் செய்தார்.

பாடசாலையின் நிறைவேற்று அபி விருத்தி குழு குழுவினர் அண்மையில் அரச அதிபரைச் சந்தித்து பாடசாலைக்கு வருமாறு விடுத்த அழைப்பை ஏற்று அங்கு அவர் வருகை தந்திருந் தார்.

அதிபர் எஸ்.ஏ.ஜஸாஹிர் தலைமை யிலான இடம்பெற்ற இந் நிகழ்வில் பாடசாலையின் அத்தியவசிய தேவை யாக இருக்கின்ற வகுப்பறை பிரச்சினை களையும் கேட்டறிந்தார். மாவட்ட செயலகத்திலிருந்து பொறியியலாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பணிப்பாளர் மற்றும் வலயக்கல்விப்பணிப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டியி ருந்தனர்.




# மறைத்து வைக்கப்பட்ட அரச வாகனம் நுவரெலியாவில் வைத்து மீட்கப்பட்டது!

நுவரெலியாவில் அரச வாகனம் ஒன்று மறைத்து வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இந்த வாகனம் முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உடன் பிறந்த சகோதரர் வீட்டில் இருந்து நேற்று (12) மாலை மீட்கப்பட்டுள்ளது.

அரசால் பல்வேறு தேவைகளுக்காக வழங்கப்படும் வாகனங்கள் ஏதேனும் ஒரு இடத்தில் மோசடியாகவோ அல்லது சட்டவிரோதமாகவோ மறைத்து வைக்கப்பட்டு பாழடைந்த நிலையில் விடப்பட்டால் அது தொடர்பில் தெரிவிக்க பொது மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கமைய நுவரெலியா பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்ட நிலையில் குறித்த வாகனம் மீட்கப்பட்டு நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்வம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.








# சாணக்கியனின் வெற்றிக்கு ஆதரவு

சாணக்கியனின் வெற்றிக்கான முழு ஆதரவையும் வழங்கியது களு வாஞ்சிகுடி முகாமை ஆலய பரிபாலன சபை.

நேற்று (12) களுவாஞ்சிகுடி முகாமை ஆலய பரிபாலன சபை மற்றும் பட்டி ருப்பு கிராம விளையாட்டுக் கழகங்கள், ஆலய நிர்வாகங்கள், பாலர் பாடசாலைகள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் அனைத்து மக்கள் நிர்வாகங்களையும் சேர்ந்தவர்களிடை யேயான சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

ஒட்டுமொத்த களுவாஞ்சிகுடி பிர தேசமும் இலங்கை தமிழரசுக் கட்சிக்கும், இரா. சாணக்கியனின் பாரிய வெற்றிக் கும் ஆதரவு வழங்குவதாக தீர்க்கமான



முடிவெடுத்தனர்.

அத்தோடு களுவாஞ்சிகுடி முகாமை ஆலய பரிபாலன சபையானது ஏனைய கட்சிகளுக்கும் அந்தக் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் எவருக்கும் ஆதரவு வழங்குவதில்லை என ஏகம னதாக தனது தீர்மானத்தை கூட்டத்தின் போது உறுதிபட கூறினர்.



# திருக்கோவிலில் இடம்பெற்றது சீரடி சாய் பாபாவின் சமாதி தினம்



(வி.ரி. சகாதேவராஜா)


சீரடி சாயிபாபாவின் 106 ஆவது மகா சமாதி தின அபிஷேக பெரும் நிகழ்வு நேற்று (12) சனிக்கிழமை திருக்கோவிலில் நடைபெற்றது.

திருக்கோவில் தாமரைக் குளத்தில் அமைந்துள்ள சீரடி சாயி கருணாலயத்தில் காலை முதல் சாயி பஜனை இடம்பெற்றது. பஜனை தொடர்ந்து பகல் அன்னதானம் இடம்பெற்றது.

அதன் பின்பு சாயி பஜனை பாராயணம் மகா சமாதி நேர புராணம் வாசித்தல் என்பவற்றுடன் அபிஷேகம் இடம்பெற்றது. சீரடி சாய்பாபாவை திருநீறு கொண்டு அபிஷேகம் செய்து அலங்கரித்து மங் களஆரத்தி எடுத்தார்கள். சாயி பக்தர்கள் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெற்றனர்.

# சரவணனின் “கள்ளத்தோணி” ஒரு சமூக விழிப்புணர்வு!

சரவணனின் “கள்ளத்தோணி” என்பது தமிழ் இலக்கியத்தில் தனிப்பட்ட இடத்தை பெற்ற ஒரு முக்கியமான நாவல். இந்த நாவல் மனித உறவுகளை சமூகத்தின் சிக்கல்களை மற்றும் காதலின் மறு பரிமாணங்களை ஆராய்கின்றது.




கள்ளத்தோணி என்றழைக்கப்படும் சிறு கிராமத்தின் பின்னணியில் அமைந்துள்ள இந்த கதை அங்கு வாழும் மக்களின் வாழ்வியல் அவர்களின் சிரமங்கள் மற்றும் சாதனைகள் ஆகியவற்றை அழகாக விலக்கி கதைப்படுத்துகிறது. இதனுடைய கதை சாரமானது கள்ளத்தோணி எனும் கிராமத்தில் ஆண்கள் மற்றும் பெண்களின் வாழ்க்கை, காதல் மற்றும் குடும்ப உறவுகள் மையமாகக் கொண்டுள்ளது.

நாவலில் பல முக்கிய கதாபாத்திரங்கள் உள்ளன. முக்கியமாக கள்ளத்தோணி கிராமத்தைச் சேர்ந்த சரவணன், அவன் காதலியான மனோஜனி என்போர் குறிப்பிடத்தக்கவர். கதாபாத்திரங்களின் உள்ளத்தையும் அவர்களின் வெளிப்பாடுகளையும் சரவணன் மிகவும் தெளிவாக காட்சிப்படுத்துகிறார்.

இந்நாவலின் சமூகத்தின் பல்வேறு அடுக்குகள் முன்வைக்கப்படுகின்றன. சிறு கிராமங்களில் வாழும் மக்கள், தங்கள் பணியாட்டம், அரசியல் மற்றும் சமூக சிக்கல்களை எதிர்கொள்வது எப்படி என்பதை சிறப்பாக விவரிக்கிறார். குறிப்பாகக் கிராம வாழ்க்கையின் சிக்கல்களை அந்தக் கள்ளத்தோணியின் கலாச்சாரத்தை மரபுகளை மற்றும் மாற்றங்களை சரவணன் உணர்ச்சியுடன் விவரிக்கிறார். மனித உறவுகள் மற்றும் காதலின் நுட்பங்களை இந்நாவல் மிக

அழகாக இழைக்கிறது. காதல்ரூபவ் சினம்ரூபவ் பிரிவு மற்றும் மன வருத்தம் ஆகியவை கதையின் மையத்தில் உள்ளன. சரவணன் ரூபவ் காதல் பற்றிய பல்வேறு பார்வைகளை வெளிப்படுத்துகிறார். அதில் மக்களின் உணர்வுகளை, அவர்களின் ஆசைகளை மற்றும் தொடர்புகளை தத்துரூபமாக வெளிப்படுத்தியிருப்பதை யதார்த்தமாக உணரக் கூடியதாக உள்ளது.


அதேபோல் சரவணனின் எழுத்து பாணி மிகவும் கவிதை மயமாகவும், நிகழ்வு சார்ந்ததாகவும் உள்ளதோடு, அவர் கதை சொல்லும் முறை வாசகனை உள்ளே கொண்டுவந்து அவர்களை கதையின் பங்கு வகிக்க வைக்கவும் உரையாடல்கள் மிகுந்த உருப்படியாக அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கதாபாத்திரங்களின் உணர்வுகளைச் சிறப்பாகப் பிரதிபலிக்கின்றன.

உண்மையில் ‘கள்ளத்தோணி’ ஒரு உருப்படியான தத்துவம் கொண்டது. அது மனித வாழ்க்கையின் எளிமை மற்றும் சிக்கல்களை அடையாளம் காட்டுகிறது. சரவணன், மனிதன் கொடுக்கும் எதிர்காலம், அவரின் வாழ்க்கை மற்றும் அவரது மனநிலை ஆகியவற்றின் மீது ஆழ்ந்த கருத்துக்களை எழுப்புகிறார். அதில், சமூகத்தில் உள்ள உடைந்த உறவுகள், உள்ளுணர்வு மற்றும் எதிர்பார்ப்பு ஆகியவை பிரதிபலிக்கின்றன.

இதில் ஆசிரியருடைய நோக்கு, என் கையில் சரவணன் கிராமிய சமூகத்தின் சிக்கல்களை மற்றும் வாழ்வியல் பரிமாணங்களை ஆராய்கிறார். அவர் கிராமங்களில் உள்ள பழமொழிகள், மரபுகள் மற்றும் புதிய மாற்றங்களை சமூகத்தின் அடிப்படையில் மையமாகக் கொண்டு விவாதிக்கிறார்.அதுமட்டுமல்லாமல் கதையில் மனித உறவுகளை மையமாகக் கொண்டு, காதல், நீக்கம், ஆதரவு மற்றும் மழலை உணர்வுகளை விவரிக்கிறார். இதன் மூலம் அவர் மனித உணர்வுகளின் பல்வேறு பரிமாணங்களை எடுத்துரைக்கிறார்.

இந்த நாவலின் மூலம், ஆசிரியர் சமூகத்தின் மாற்றங்களை எதிர்கொண்டு புதிய யுகத்தை கண்டு பிடிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார். இது வருங்காலத்துக்கான ஒளி தரும் விதமாக உள்ளது.

மனித வாழ்க்கை, உறவுகள் மற்றும் வாழ்க்கையின் சிக்கல்களை பற்றிய தத்துவங்களை வாசகர்களுக்கு ஆழமான சிந்தனையை உருவாக்குகின்றது. இத்தகைய நோக்கு நிலை கள்ளத்தோணி எனும் நாவலை ஆழமாகவும் பரந்தமானவையாக்கி வாசகர்களுக்கு உள்தரிசனம் அளிக்கிறது.




கிராம வாழ்க்கையின் சிக்கல்களை எடுத்துக்காட்டி சமூகத்தில் வரவிருக்கும் மாற்றங்களைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்க வேண்டும் என்பதோடு கட்டுப்பாடுகள் பாரம்பரியங்கள் மற்றும் புதிய யுகத்தின் பாதைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி வாசகர்களை உள்நோக்கமாக சிந்திக்க வைக்கும் விதத்தில் கதை மூலம் அவர்களின் மனதில் கேள்விகள் எழுப்ப வேண்டும் என்பதே ஆசிரியரின் நோக்கம் மற்றும் எதிர்பார்ப்பு எனலாம்.

சரவணனின் கள்ளத்தோணி நாவல் வாசகர்களை ஒரு சமூக உரிமையாளர் போல சிந்திக்க வைக்கும் படைப்பு. இது தனிப்பட்ட உறவுகளின் பாதிப்புகளை சமூகத்தில் நிகழும் மாற்றங்களை மற்றும் மனித அனுபவத்தின் நுட்பங்களை வெளிப்படுத்துகிறது. ஆசிரியர் காதலின் அழகு மற்றும் கடுமைகளை சமூகத்தின் அடிப்படைகளில் நம்மைத் தெளிவாக ஆழமாகப் புகுத்துகின்றார்.

இந்த நாவலின் மூலம் வாசகர்கள் தங்களின் வாழ்வியல் உறவுகள் மற்றும் சமூகத்தின் மாறுபாடுகளைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனைகளை உருவாக்கி வாழ்க்கையின் தருணங்களை புதிய பார்வையில் காணத்தூண்டும். இது நவீன மனிதனின் உள்ளுணர்வுகள் மற்றும் அவரின் எதிர்காலத்துக்கான சிந்தனைகளை மிக அழகாக எடுத்துரைக்கும் ஒரு உன்னதமான கதை. அதனால் இது ஒவ்வொரு வாசகரும் மீண்டும் மீண்டும் வாசிக்க விரும்பும் வகையில் இருக்கும். ‘கள்ளத்தோணி’ ஒரு அனுபவம் மட்டுமல்ல அது வாழ்க்கையின் சிக்கல்களைப் பற்றிய ஒரு உண்மை கலந்த விழிப்புணர்வுமாகும்.

- கணேஷ் குமார்.




## நீதி மறுக்கப்பட்ட லசந்த, நிமலராஜன் கொலைகள்:



# ஊடக அடக்குமுறைக்கு அநுரவின் அரசு நீதி வழங்குமா ?

■ நவீனன்

இலங்கை தீவில் சுயாதீனமாக கருத்துக்களை வெளிக் கொண்டுவந்த சிங்கள, ஆங்கில , தமிழ் ஊடகவியலாளர் பலர் கொல்லப்பட்டுள்ளனர். தற்போது ஆட்சி பீடம் ஏறியுள்ள இடதுசாரி முலாம் பூசப்பட்ட அநுரவின் புதிய அரசு ஊடகர்கள் படுகொலைகளுக்கு நீதியை வழங்க வேண்டும் என பத்திரிகையாளர் சங்கம் கோரியுள்ளது.

ஆயினும் தற்போது அநுரவின் புதிய அரசு நீதி வழங்குமா என்பது கேள்விக்குறியே?

### ஊடகங்களுக்கு எதிரான அடக்குமுறை

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலையை அடுத்து இலங்கையின் ஊடகத்துறை கடும் நெருக்கடிக்கு உள்ளாகியது. ஈழப்போர் உச்ச மடைந்திருந்த 2009 இல் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலையை அடுத்து இலங்கையின் ஊடகத்துறை சில மாதங்களாக மௌனமாகியது.

சிங்கள ஊடகவியலாளர்கள் அடக்கப்படுவதிலும் மேலாக, ஈழத்தில் தமிழ் சுயாதீன ஊடகங்களை அடக்குவதற்கு வன்முறையைப் பயன்படுத்துவதிலும், அரச படைகளின் கொடூர தாக்குதல்களும் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகப் பணியாற்ற முடியாத ஒரு சூழலுக்குள் தள்ளப்பட்டிருந்தார்கள்.

ஈழநாடு 1981 இல் எரிப்பு முதல், பின்னர் இந்திய இராணுவத்தால் முரசொலி, ஈழமுரசு, நிதர்சனம் தகர்க்கப்பட்டதில் இருந்து தமிழ் ஊடகங்களின் மீதான அடக்குமுறை பல்வேறு காலங்களில் ஆதிக்க சக்திகளினால் பிரயோகிக்கப்பட்டது.

குறிப்பாக, ஊடகவியலாளர்களான நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரட்ணம் சிவராம், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், செல்வராஜா ரஜீவர்மன், லசந்த விக்கிரமதுங்க, பரணிரூபசிங்கம் தேவகுமார், என சுதந்திர ஊடகத்துறையை காக்கவென அயராது உழைத்த எத்தனையோ தமிழ் பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

### சிங்கள ஊடகவியலாளர் கொலை

இலங்கையில் 1990 ஆம் ஆண்டு இன்ரர் பிறஸ் சேர்வீஸ் நிறுவனத்தின் ஊடகவியலாளன் ரிச்சேட் டி சொய்சா கடத்தப்பட்டு கொல்லப்பட்டதோடு இந்த நீண்ட கறைபடைந்த வரலாறு தொடர்ந்தது எனலாம். 28 ஏப்ரல் 1990 ஆம் ஆண்டு ரிச்சட் டி சொய்சாவின் உடல் கண்டெடுக்கப்படுகிறது. அவரது உடலை அடையாளங்கண்டு கொண்டவர் தராகி என்ற தர்மரட்ணம் சிவராம். தமிழ் நெற் இணையத்தினுடைய ஆசிரியரான இருந்தவர். பின்னர் 28 ஏப்ரல் 2005 அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைப்பட்டியல் பின்னர் நீண்டு அதிகரித்து வந்துள்ளது. இதன்பின் தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். உண்மைத் தகவல்களை வெளிக் கொண்டுவந்தார்கள் என்பதற்காக இவர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

தமிழ் ஊடகத்துறையில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறைகளையும் ஒடுக்கு முறைகளையும்

தொடர்ச்சி▼

# ஊடக அடக்குமுறைக்கு அநுரவின் அரசு நீதி வழங்குமா ?

தொடர்ச்சி▲

வெளிக்கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதுபோன்று சுயாதீனமாக கருத்துக்களை வெளிக்கொண்டுவந்த சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும் கொல்லப் பட்டுள்ளனர்.

**லசந்த விக்ரமதுங்க படுகொலை**

2015 தேர்தலுக்கு முன்னரும் அதற்குப் பின்னரும் லசந்த விக்ரமதுங்கவின் குடும்பத்தாருக்கு கொலையில் தொடர்புடைய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருந்தார்.

லசந்த விக்கிரமதுங்க இலங்கை அரசுக்கு எதிராகவும் பல அரசியல்வாதிகள் தொடர்பாகவும் ஆயுதக் குழுக்கள் தொடர்பாகவும் மிக நீண்டகாலமாக மிகக் கடுமையான கட்டுரைகளை 'சண்டே லீடர்', 'மோர்னிங் லீடர்' மற்றும் ஞாயிறு சிங்களப் பத்திரிகையான 'இருதின' என்பன வெளியிட்டு வந்ததால் இவர் பல ஆண்டுகளாக்க தொடர்ந்து கடுமையான அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி வந்திருந்தார்.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 15 வருடங்கள் ஆகின்றன. 2009 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி, சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர், சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டார். ஆயினும் இதுவரை முழுமையான தீர்ப்பு வரவில்லை.

**லசந்த மீதான கொலை முயற்சிகள்**

லசந்தவைக் கொலை செய்வதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 1995 பெப்ரவரியில் லசந்த அவரது வாகனத்துக்குள் வைத்துத் தாக்கப்பட்டார். 1998 ஜூனில் அவரது வீட்டின் மீது கிரனேட் வீசப்பட்டது. 2005 ஒக்ரோபரிலும் 2007 நவம்பரிலும் சண்டே லீடர் அச்சகத்துக்குத் தீ வைத்து நிர்மூலஞ் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

2009 ஜனவரி 8 வியாழக்கிழமை காலை 09.30 மணியளவில் கொழும்பு கல்கிசையில் உள்ள 'லீடர் பப்ளிகேஷன்' அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்த போதே துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர். தலையிலும் மார்பிலும் குண்டுகள் பாய்ந்து படுகாயமடைந்து மிகவும் ஆபத்தான நிலையில் இவர் உடனடியாக களுபோவில மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப் பட்டு அவசர சிகிச்சைக்கு உட்பட்டாலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

**நிமலராஜன் படுகொலை**

கொடூரமான போரால் இலங்கையில் பதற்றமான சூழல் நிலவிக் கொண்டிருந்த வேளையில் பலத்த அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்தில் இருந்து செய்திகளை வழங்கி வந்த நிமலராஜன் கடந்த 2000 ஆண்டு ஒக்ரோபர் 19 ஆம் திகதி கொல லப்பட்டார்.

ஆபத்துகளுக்கு மத்தியில் தொடர்ந்து போர் குறித்தும், மனித உரிமை மீறல்கள் மற்றும் அரசியல் நிகழ்வுகள் குறித்தும் பிபிசி தமிழ் உட்பட பல ஊட



கங்களுக்கு செய்திகளை வழங்கி கொண்டிருந்தவர் நிமலராஜன்.

நிமலராஜனின் ஊடகப்பணி என்பது கடுமையான பணியாகதான் இருந்தது.

ஈழப் போரின் மையப்புள்ளியாக இருந்த யாழ்ப் பாணத்தில் இருந்து செய்திகளை வழங்கி கொண்டிருந்த மயில்வாகனம் நிமலராஜன் அவரது வீட்டில் வைத்து கொலை செய்யப்பட்டார். அவருக்கு ஆபத்துகளும் அதிகம் இருந்தன. பலதரப்பட்ட அரசியல் அச்சுறுத் தல்களும் இருந்தன.

போர்க் காலத்தில் இலங்கையில் நடைபெற்ற பொதுதேர்தலில் ஏற்பட்ட வன்முறைகள் குறித்து அவர் செய்தி வழங்கினார். இலங்கையில் அரசியல் கட்சியாக இருக்கும் ஓர் கட்சி மோசடி செய்ததாகவும், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

நிமலராஜன் கொல்லப்பட்ட அன்றும் பத்திரிகை செய்தி ஒன்றை எழுதி கொண்டிருந்தார். அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் வீட்டுக்குள் புகுந்து நிமலராஜனை துப்பாக்கியால் சுட்டனர். நிமலராஜன் கொலை தொடர்பாக சில கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இன்றுவரை இந்த கொலை குற்றம் யார் மீதும் நிரூபிக்கப்படவில்லை.

**நீதி மறுக்கப்பட்ட பத்திரிகையாளர்கள்**

அமெரிக்காவிலிருந்து பத்திரிகையாளர்களுக்காக செயல்படும் 'கமிட்டி டு ப்ரொடக்ட் ஜர்னலிஸ்ட்ஸ்' என்ற அமைப்பு 45 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கிறது.

ஆனால் இந்த எண்ணிக்கை 100 இற்கும் அதிகம் என்பதே உண்மையாகும்.

வடக்குக் கிழக்கு தமிழர் தாயக பகுதிகளில் மட்டும் 59 இற்கும் மேற்பட்ட ஊடகப் பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் தொடர்பாக இதுவரை சொல்லிக் கொள்ளத்தக்க வகையில் இலங்கை சார்பாக எந்த விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்பதே வரலாற்று உண்மையாகும்.

ஆயினும் தற்போது ஆட்சி பீடம் ஏறியுள்ள மார்க்சிச முலாம் பூசப்பட்ட அநுரவின் புதிய அரசு, ஊடகர்கள் படுகொலைகளுக்கு நீதியை வழங்க வேண்டும் என பத்திரிகையாளர் சங்கம் கோரியுள்ளது.

# இஸ்ரேல் ஆதரவு நிலைபாட்டை மத்திய அரசு மாற்ற வேண்டும்

## சென்னையில் நாளை வி.சி.க. ஆர்ப்பாட்டம்

இஸ்ரேல் ஆதரவு நிலைப்பாட்டை மத்திய அரசு மாற்றிக் கொண்டு,பாலஸ்தீன மக்களின் கோரிக்கையை அங்கீகரிக்க வலியுறுத்தி சென்னையில் நாளை வி.சி.க. ஆர்ப்பாட்டம் நடத்துகிறது.

சென்னையில் 10 ஆம் திகதி கட்சியின் தலைவர் திருமாவளவன் தலைமையில் உயர்நிலைக் குழுகூட்டம் நடைபெற்றது. இதில் பொதுச் செயலாளர்கள் துரை. ரவிக்குமார், சிந்தனைச் செல்வன், முதன்மைச் செயலாளர் பாவரசு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

“மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு மகளிர் மாநாட்டின் தீர்மானங்களின் அடிப்படையில், தமிழகத்தில் மதுவிலக்கை நடைமுறைப்படுத்த தமிழக அரசும், மதுவிலக்கு விசாரணை ஆணையம் அமைக்க மத்திய அரசும் முன்வர வேண்டும்.

ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலும் மாநாடு ஒருங் கிணைக்கப்படும். ஒன்றியம் உள்ளிட்ட நிலைகளில் மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் முன்னெடுக்கப்படும். ‘சாம்சங்’ நிறுவனத் தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைக்க அரசு அனுமதிப்பதோடு, அவர்கள் மீதான வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும்.

இஸ்ரேல் ஆதரவு நிலைப்பாட்டை மத்திய அரசு மாற்றிக் கொண்டு, பாலஸ்தீன மக்களின் கோரிக்கையை அங்கீகரிக்க வலியுறுத்தி சென்னையில் நாளை ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். இலங்கை கடற்படையால் கைதான மீனவர்கள், படகுகள் போன்றவற்றை மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு வேலைவாய்ப்பு வெகுவாகக் குறைந்து வரும் நிலையில் எஸ்.சி, எஸ்.டி, ஓ.பி.சி. பிரிவினருக்குத் தனியார் துறையில் இடஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டத்தை தமிழக அரசு இயற்ற வேண்டும்.



மாநில எஸ்.சி, எஸ்.டி ஆணையம் அமைத்தது மற்றும் எஸ்.சி, எஸ்டி துணைத் திட்டத்துக்கான சட்டம் இயற்றியது போன்றவற்றுக்காக தமிழக அரசுக்கு நன்றி. பதவி உயர்வில் இடஒதுக்கீட்டை உறுதி செய்ய வேண்டும். ஆணவக் கொலைகளைத் தடுக்க சட்டம் இயற்ற வேண்டும். அரசுத் துறைகளில் பின்னடைவுக் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். எஸ்.சி. இடஒதுக்கீட்டின் அளவை 24 சதவீதமாக உயர்த்த வேண்டும். எஸ்சி பட்டியலில் உள்ள சாதிகளின் பெயர்களில் இழிவைக் குறிக்கும் வகையிலுள்ள ‘ன்’ விகுதியை பிற்படுத்தப்பட்டோருக்கு மாற்றப்பட்டது போல ‘ர்’ என முடியும் வகையில் மாற்ற வேண்டும்.”- இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# சுழற்சி முறையில் எதிர்க்கட்சி தலைவர் பதவி: இண்டியா கூட்டணிக்கு பா.ஜ.க. வலியுறுத்தல்



மக்களவை எதிர்க்கட்சி கட்சி தலைவர் பொறுப்பை சுழற்சி முறையில் கொண்டு வருவது பற்றி இண்டியா கூட்டணி தலைவர்கள் முடிவெடுக்க வேண்டும் என பா.ஜ.க. தலைவர்கள் கருத்து தெரிவித்து உள்ளனர்.

ஹரியானா தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெறும் என தேர்தல் கருத்து கணிப்புகள் கூறின. ஆனால், அதை பொய்யாக்கி பா.ஜ.க. வெற்றி பெற்று அங்கு 3 ஆவது முறையாக ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

ஹரியானா சட்டப்பேரவை தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்கு காங்கிரஸ் கட்சியின் அதீத தன்னம்பிக்கையும், உட்கட்சி பூசலும்தான் காரணம் என இண்டியா கூட்டணி கட்சிகள் விமர்சித்தன. மேலும், மக்களவை எதிர்க்கட்சி தலைவர் பதவியை சுழற்சி முறையில் கொண்டு வருவது பற்றியும் இண்டியா கூட்டணி கட்சிகள் ஆலோசிப்பதாக கூறப்பட்டது.

இது குறித்து டில்லி பா.ஜ.க. எம்.பி பன்சூரி ஸ்வராஜ் கூறுகையில்,

“மக்களவை எதிர்க்கட்சி தலைவர் பதவியை சுழற்சி முறையில் கொண்டு வருவது பற்றி இண்டியா கூட்டணி ஆலோசித்து வருவதாக கேள்விப்பட்டேன். அப்பதவிக்கு இண்டியா கூட்டணியில் தகுதி வாய்ந்த தலைவர்கள் உள்ளனர். எதிர்க்கட்சி தலைவர் பொறுப்பை ராகுலால் முழு அர்ப்பணிப்புடன் செய்ய முடியவில்லை என இண்டியா கூட்டணி கருதினால், அப்பதவியை சுழற்சி முறையில் கொண்டு வருவது பற்றி அவர்கள் முடிவுடுக்க வேண்டும். இது இண்டியா கூட்டணியின் உள் விவகாரம்.” –என்றார்.

பா.ஜ.க. செய்தி தொடர்பாளர் அமித் மால்வியா கூறுகையில்,

“ஹரியானா தேர்தல் தோல்விக்கு ராகுல் காந்தி பொறுப்பேற்க வேண்டும். உட்கட்சி தலைவர்களின் மோதல்தான் ஹரியானா தேர்தல் தோல்விக்கு காரணம் என ஆலோசனை கூட்டத்தில் குற்றம்சாட்டிவிட்டு ராகுல் காந்தி வெளியேறிதாக ஊடகங்களில் தகவல் வெளியாகியுள்ளது. இது உண்மை என்றால், ராகுலின் மோசமான தலைமையை காட்டுகிறது. எனவே, அவரிடமிருந்து மக்களவை எதிர்க்கட்சி தலைவர் பதவியை எதிர்க்கட்சிகள் பறிக்க வேண்டும்.” – என்றார்.

மக்களவை எதிர்க்கட்சி தலைவர் பதவியை சுழற்சி முறையில் கொண்டு வர முடியுமா எனமக்களவை தலைமை செயலாளர் ஆச்சாரி தெரிவிக்கையில், “மக்களவையில் தனிப் பெரும்பான்மை யாக உள்ள எதிர்க்கட்சியின் எம்.பி. யைதான் எதிர்க்கட்சி தலைவராக நியமிக்க முடியும்.” – என்றார்.



# காசாவின் ஜபாலியா முகாம் மீது இஸ்ரேல் தரைவழித் தாக்குதல்

## 22 பேர் உயிரிழப்பு

வடக்கு காசாவில் உள்ள ஜபாலியா முகாம் மீது இஸ்ரேல் தரைவழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட 22 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

ஹமாஸ் குழுவினர் மீண்டும் ஒருங்கிணைவதைத் தடுக்கும் நோக்கத்தில் இஸ்ரேல் இராணுவம் ஜபாலியா பகுதியில் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருவதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், காயமடைந்தவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளனர் எனவும் இதனால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# அணுசக்தி தளங்களின் ரகசிய தகவல்கள் திருட்டு: இஸ்ரேலின் சைபர் தாக்குதலில் ஸ்தம்பித்தது ஈரான்



இஸ்ரேல் உளவுத் துறையின் சைபர் தாக்குதலால் ஈரான் அரசின் செயல்பாடுகள் முடங்கிப் போயின. குறிப்பாக ஈரானின் அணுசக்தி தளங்கள் மீதும் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டு ரகசியங்கள் திருடப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா பகுதியை சேர்ந்த ஹமாஸ் தீவிரவாத அமைப்பின் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹனியா கடந்த ஜுலை 31ஆம் திகதி ஈரான் தலைநகர் தெஹ்ரானில் படுகொலை செய்யப்பட்டார். இதன் பின்னணியில் இஸ்ரேல் உளவுத் துறை இருப்பதாக ஈரான் பகிரங்கமாக குற்றம் சாட்டியது. அப்போது இரு நாடுகளிடையே போர் பதற்றம் ஏற்பட்டு தணிந்தது.

இதைத் தொடர்ந்து கடந்த 27 ஆம் திகதி லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இஸ்ரேல் விமானப்படை நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா உயிரிழந்தார். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் கடந்த 1 ஆம் திகதி இஸ்ரேல் பகுதிகளை குறிவைத்து ஈரான் ராணுவம் 180 ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது.

இந்த தாக்குதலுக்காக ஈரானுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார். ஆனால் இதுவரை ஈரான் மீது நேரடி தாக்குதல் நடத்தப்படவில்லை.

எனினும் ஈரானின் பொருளாதாரத்தை முடக்கும் வகையில் அமெரிக்க அரசு, அந்த நாட்டின் மீது நேற்று முன்தினம் புதிய பொருளாதார தடைகளை விதித்தது. இதன்படி ஈரானில் கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலிய பொருட்கள் ஏற்றுமதியில் ஈடுபட்டிருக்கும் 10 நிறுவனங்களுக்கு அமெரிக்க அரசு தடை விதித்துள்ளது.

இந்த சூழலில் ஈரான் அரசு நிர்வாகம், நாடாளுமன்றம், சட்டப்பேரவை நிர்வாகம் மற்றும் நீதித் துறை நிர்வாகத்தை குறிவைத்து இஸ்ரேல் உளவுத் துறை தொடர் சைபர் தாக்குதல்களை நடத்தி உள்ளது. இதன் காரணமாக ஈரான் அரசின் செயல்பாடுகள் முற்றிலுமாக முடங்கியிருக்கிறது. குறிப்பாக ஈரானின் அணுசக்தி தளங்கள், எரிசக்தி, மின் விநியோக கட்டமைப்பின் செயல்பாடுகள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன.

ஈரான் முழுவதும் உள்ள வங்கிகள் முடங்கி உள்ளன. ஏடிஎம் மையங்களில் இருந்து பணம்கூட எடுக்க முடியவில்லை.

இதுகுறித்து ஈரான் சைபர் கவுன்சில் முன்னாள் செயலாளர் பெரோஸ்பாடி, ஈரான் இன்டர்நேஷனல் என்ற ஊடகத்துக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவிக்கையில்,

“ஈரானின் அனைத்து அரசு துறைகள் மீதும் சைபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டு உள்ளன. மிக முக்கிய ஆவணங்கள் திருடப்பட்டு உள்ளன. ஈரானின் அணுசக்தி தளங்கள், எண்ணெய் குழாய் கட்டமைப்பு, போக்குவரத்து, துறைமுகங்கள் ஆகியவற்றின் மீதும் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கிறது. ஈரான் அணுசக்தி தளங்களின் ரகசிய ஆவணங்கள் திருடப்பட்டு உள்ளன. ஈரான் முழுவதும் குழப்பமான சூழல் நிலவுகிறது.” – என்றார்.

இதுகுறித்து சர்வதேச சைபர் நிபுணர்கள் தெரிவிக்கையில்,

“கடந்த செப்டம்பர் 17 ஆம் திகதி லெபனான் நாட்டில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் பயன்படுத்திய 5,000 பேஜர்கள் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறின. இதில் ஏராளமான தீவிரவாதிகள் உயிரிழந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர். இதன்பிறகே இஸ்ரேல் ராணுவம், ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் இடையிலான மோதல் தீவிரமடைந்தது. தற்போது லெபனான் மீது இஸ்ரேல் நேரடியாக போர் தொடுத்திருக்கிறது.

இதற்கு முன்பு கடந்த 2009 ஆம் ஆண்டில் இஸ்ரேலின் மொசாட் உளவுத் துறை நடத்திய சைபர் தாக்குதல் மூலம் ஈரானின் அணு ஆயுத திட்டம் முடங்கியது. அப்போது ஈரானின் நடான்சு நகரில் உள்ள அணுசக்தி தளத்தின் கணினிகளில் ஸ்டக்ஸ்நெட் என்ற வைரஸை பரப்பி அந்த அணுசக்தி தளத்தை இஸ்ரேல்உளவுத் துறை முற்றிலுமாக முடக்கியது.

தற்போது அதே பாணியில் ஈரானின் அணுசக்தி தளங்கள் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த தாக்குதல் குறித்து இஸ்ரேல் தரப்பிலோ, ஈரான் தரப்பிலோ இதுவரை எந்த தகவலும் வெளியிடப்படவில்லை. எனினும் இஸ்ரேல் உளவுத் துறையின் சைபர் தாக்குதலால் ஈரான் அரசின் நிர்வாகம் நிலைகுலைந்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. “ – என்று தெரிவித்துள்ளனர்.

பக்கங்கள் 02

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 13/10/2024

## கனடாவில் நாயொன்றின் உரிமையாளருக்கு அபராதம்

கனடாவில் நாய் ஒன்றின் உரிமையாளர்களுக்கு நீதிமன்றம் ஒன்று பெருந்தொகை அபராததத்தை விதித்துள்ளது.

வீட்டு பராமரிப்பு தாதி ஒருவரை மேற்படி தம்பதியினரின் வளர்ப்பு நாய் கடித்து 02





# லிபரல் கட்சியின் தலைமையிலிருந்து ட்ரூடோவை நீக்க கட்சியினர் திட்டம்

**கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோவை, அவர் சார்ந்த லிபரல் கட்சியின் தலைமையிலிருந்து நீக்கு வதற்காக அவரது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் சந்தித்து திட்டம் தீட்டிவருகின்றனர்.**

நடந்து முடிந்த இடைத்தேர்தலில், ஜஸ்டின் ட்ரூடோவின் லிபரல் கட்சி Toronto-St. Paul தொகுதியை பறிகொடுத்ததைத் தொடர்ந்து, லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அவரை கட்சித் தலைமையிலிருந்து நீக்குவதற்காக தொடர்ந்து சந்தித்து திட்டமிட்டுவருகிறார்கள்.

பின்னர் மொன்றியல் இடைத் தேர்தலிலும் லிபரல் கட்சி தோல்வியைத் தழுவவே, ட்ரூடோவை பதவியிலிருந்து அகற்றும் அவரது கட்சியினரின் முயற்சிகள் மேலும் அதிகரித்தன.

இந்த நிலையில், கனடா பிரதமரான ட்ரூடோ தனது அரசின் மூத்த அதிகாரிகளுடன் ஆசிய உச்சி மாநாடு ஒன்றிற்காக செல்ல, அவர் இல்லாத நேரத்தில் அவருக்கெதிரான கூட்டங்களின் மும்முரம் தீவிரம் அடைந்துள்ளது.

ட்ரூடோவை பதவிலிருந்து இறக்குவதில் எந்த அளவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக உள்ளனர் என்பதை உறுதி செய்வதற்காக, வாக்குறுதி ஒன்றில் கையெழுத்திடவும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுள்ளனர் என தகவல்கள் வெளியாகிவருகின்றன.

சுமார் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளனர் என்றும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனாலும், அடுத்த தேர்தல்வரை, தான் தலைமைப் பதவியில் நீடிக்கப் போவதாக ஜஸ்டின் ட்ரூடோ தொடர்ந்து கூறிவருகின்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

# கனடாவில் வாகனத்தில் வைக்கப்பட்ட ஒரு லட்சம் டொலர் பணம் கொள்ளை




கனடாவில் ஒருவரிடமிருந்து ஒரு லட்சம் டொலர் கொள்ளையிடப்பட்டுள்ளது.

வாகனமொன்றில் வைத்து இவ்வாறு மேற்படி நபரிடம் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

மொஹமட் யாகுபி என்ற நபரின் பணமே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பணத்தை இழந்ததன் மூலம் தமது வாழ்க்கையையே இழக்க நேரிட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

100000 முதல் 110000 டொலர்கள் வரையில் காரில் பணம் வைத்திருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெட்டி நிறைய பணம் கொண்டு வருதனை கண்காணித்து இந்த கொள்ளை இடம்பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளார்.

# கத்தியை காண்பித்து மிரட்டல் 13 வயது சிறுமி மீது குற்றச்சாட்டு

கனடாவின் ஒஷாவா பகுதியைச் சேர்ந்த 13 வயதான சிறுமி ஒருவர் கத்தியை காண்பித்து மிரட்டியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மற்றுமொரு சிறுமியுடன் ஏற்பட்ட மோதலின் போது இந்த சிறுமி கத்தியைக் காண்பித்து அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

டர்ஹம் பிராந்திய பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சிம்கோ மற்றும் பிரிட்டானியா வீதிகளுக்கு அருகாமையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரண்டு சிறுமிகளும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ள முயற்சித்துள்ளனர் எனவும் ரிவிக்கப்படுகிறது.

ஒரு சிறுமி கத்தியை கொண்டு மற்றைய சிறுமியை தாக்க முயற்சித்து உள்ளார் எனவும் அவரை கத்தியுடன் விரட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


இதன்போது ஒரு சிறுமி சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சிறுமியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.




சம்பவத்துடன் தொடர்புடைய சிறுமிகள் தொடர்பான விபரங்களை எதுவும் வெளியிடப்படவில்லை.

கனடிய சிறுவர் பாதுகாப்பு சட்டங்களின் பிரகாரம் சிறுமியரின் தகவல்கள் ஊடகங்களில் வெளியிடப்பட மாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது.




# ஒன்றாரியோவில் முதியவர்களிடம் பணமோசடி செய்த ஒருவர் கைது

கனடா ஒன்றாரிய மாகாணத்தில் முதியவர்களை ஏமாற்றி அவர்களிடம் பண மோசடி செய்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஏற்கனவே இவ்வாறான குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒன்றாரியோ மற்றும் கியூபெக் மாகாண பொலிஸார் கூட்டாக இணைந்து முன்னெடுத்து வந்த விசாரணைகளின் ஒரு கட்டமாக இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன என தெரிவிக்கப்படுகிறது.

இந்த வயோதிபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள் தொடர்பில் 14 பேருக்கு எதிராக 56 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த நபர்கள் 126 கனடிய முதியவர்களை ஏமாற்றி பண மோசடி செய்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

சுமார் ஏழரை லட்சம் டொலர்கள் மோசடி செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.



## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயப்படுத்திய சம்பவம் தொடர்பான வழக்கின் தீர்ப்பின் போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஹாலிபெக்ஸ் பகுதியைச் சேர்ந்த குறித்த தம்பதியினருக்கு நீதிமன்றம் இவ்வாறு உத்தரவு பிறப்பித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 61000 டொலர்களை நட்ட ஈடாக வழங்க வேண்டும் எனவும் நீதிமன்ற கட்டணங்களாக நான்காயிரம் டாலர்களை செலுத்த வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நோவா ஸ்கோசியா உச்ச நீதிமன்றத்தின் நீதியரசர் கிரிஸ்டா பிரதர்ஸ் இந்த தீர்ப்பினை வழங்கியுள்ளார்.

நாயை கட்டுப்படுத்த தவறியதாக நீதிமன்றம் தம்பதியினர் மீது குற்றம் சுமத்தியிருந்தது.

புல்டோக் ரக நாய் மேற்படி தாதியை கடுமையாக கடித்து தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறு எனினும் இவ்வளவு பாரிய தொகையை செலுத்துவதற்கு தம்மிடம் பணம் இல்லை என மேற்படி தம்பதியினர் நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளனர்.